# புதுமைப்பித்தனின் நாடகங்களில் வெளிப்படும் உத்திகள்

37

**முனைவர் இரா.பொன்னி**

**உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,**

**பாத்திமா கல்லூரி, மதுரை.**

**ஆய்வுச் சுருக்கம் :**

தமிழ்ச் சிறுகதை உலகின் சகாப்தமான புதுமைப்பித்தன் நாடகத்துறையிலும் தம் பங்களிப்பைத் திறம்படச் செய்துள்ளார். இவர்தம் நாடகங்களான: 'பக்த குசேலா', 'நிச்சயமா நாளைக்கு', 'வாக்கும் வக்கும்' மூன்று நாடகங்களிலும் அவர் பயன்படுத்திய உத்திகளை ஆராய்வதே இக்கட்டுரை.

குசேலர் கதைக்கு ஒரு பகடி நூலாக 'பக்த குசேலா - கலியுக மாடல்' எனும் நாடகத்தை எழுதியுள்ளார் ஆசிரியர். வறுமை மிகுந்த ஒரு குடும்பத்தில் குழந்தைகளின் பரிதாப நிலையை எதார்த்தமாகக் கொண்ட அமைக்கப்பட்ட கதைக்களம்.

இல்லாமையைச் சமாளிக்க ஒவ்வொரு நாளும் கடன்கள் வாங்கி, அவற்றைத் திருப்பித்தர இயலாத நிலையில் ஒவ்வொரு நாளும் சாக்குப் போக்குகள் கூறிச் சாமர்த்தியமாக சமாளித்து காலம் தள்ளுவதைச் சித்திரிக்கும் 'நிச்சயமா நாளைக்கு' எனும் நாடகம்.

செல்வம் அதிகம் பெற்ற அறிவிலியையும், ஞானம் அதிகம் பெற்ற ஏழைக்கும் இடையில் நடக்கும் போட்டியை மையமாகக் கொண்ட நாடகம் 'வாக்கும் வக்கும்'.

மேற்கூறிய மூன்று நாடகங்களிலும் தலைப்பிடல் உத்தி, காட்சியமைப்புக் குறிப்புகள், எள்ளல் சுவை நிறைந்த பேச்சு நடை, சமுதாயத்தில் நிகழும் எதார்த்தமான கதைக்களம் கொண்டு புதுமைப்பித்தன் படைத்துள்ளார்.

இவர்தம் கதைக்களத்தில் சமுதாயத்தில் நிகழும் பிரச்சனைகளையும் சிக்கல்களையும் அலசி ஆராய்ந்துள்ள விதம் ஒவ்வொரு மனிதனையும் சிந்திக்க வைக்கும் திறன் கொண்டது.

**ஆய்வு நோக்கம் :**

புதுமைப்பித்தன் நாடகங்களில் சமுதாய எதார்த்தங்களை வெளிப்படுத்தும் கதைக்கருவையும், எள்ளல் சுவையோடு நாடகக் கட்டமைப்புக் குறையாது அமைத்தத் திறனையும், உத்திகளையும் ஆராய்வதே ஆய்வுக்கட்டுரையின் நோக்கமாகும்.

புதுமைப்பித்தன் தமிழ் இலக்கியப் புனைவுலகில் தனக்கென சிறந்த தடத்தை உருவாக்கிக் கொண்டவர். சமுதாய எதார்த்தங்களைக் கதைப்பொருளாகக் கொண்டு இலக்கியம் படைக்கும் வித்தகர். வாழ்ந்த காலங்கள் குறுகியதாக இருந்தாலும் இலக்கியப் படைப்புலகுக்குப் பல புதுமைகளையும் புரட்சிகளையும் ஏற்படுத்திச் சென்றவர். இவர்தம் படைப்புகள் அனைத்தும் வருங்கால எழுத்தாளர்களுக்கு வழிகாட்டுதல்களாக இருக்கின்றன.

"பேனாவை வைத்துக் கொண்டு கோனாகி விடுவோம்! என்று அவர் ஒரு நாளும் கனவு காணவில்லை; ஆனால் பேனாவை வைத்துக்கொண்டு பிச்சையெடுக்க வேண்டும் என்று நினைக்கவும் இல்லை" என்று மனவுறுதியோடு எழுத்துப்பணியைத் தொடர்பவர். தம்முடைய இலக்கியப் படைப்புக்கு சரியான விமர்சனம் கூட கொடுக்காத வர்களை 'உண்மைப் பற்றுதலை உலகுக்குக்

காண்பிக்க தைரியமில்லாத கோழைகள்' என்று சாடிய புதுமைப்பித்தன் இதற்காக நான் எழுதாமல் இருக்கப் போவதில்லை என்றும் தீர்மானமாகிறார்.

தமிழ்ச் சிறுகதை உலகின் சகாப்தமான புதுமைப்பித்தன் நாடகத்துறையிலும் தம் பங்களிப்பைத் திறம்படச் செய்துள்ளார். சின்னச் சின்ன நாடகங்களை அவருக்கே உரிய கேலியும் குத்தலும் நிறைந்த பாணியில் எதார்த்தமான உண்மைகளோடு படைத்தளித்துள்ளார். இவர்தம் நாடகங்கள்:

1. பக்த குசேலா
2. நிச்சயமா நாளைக்கு
3. வாக்கும் வக்கும்
4. உலக அரங்கு (மொழிபெயர்ப்பு நாடகம்)

இவற்றுள் மொழிபெயர்ப்பு நாடகம் தவிர்த்த முதல் மூன்று நாடகங்களில் வெளிப்படும் உத்திகள் இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

**பக்த குசேலா**

புதுமைப்பித்தன் எழுதிய முதல் நாடகம் 'பக்த குசேலா - கரியுக மாடல்'. குசேலர் கதையை பகடி செய்து எழுதிய நாடகம் இது.

"பகடி என்பதற்கு நையாண்டி அல்லது முரண்பாடான சாயல் மூலம் அதன் விஷயத்தைப் பின்பற்றவும், கருத்து தெரிவிக்கவும் மற்றும்/அல்லது கேலி செய்யவும் வடிவமைக்கப்பட்ட ஒரு ஆக்கப்பூர்வமான படைப்பாகும்" என்று தமிழ் விக்சனரி கூறுகிறது. பெரும்பாலும் கருப்பொருள், உள்ளடக்கம், ஆசிரியர், நடை போன்றவற்றில் வெளிப்படும். பகடி என்னும் சொல்லுக்கு எகத்தாளம், எக்காளம், கிண்டல், கேலி, நக்கல், பரிகாசம், பரியாசம் என்றெல்லாம் பொருள் கொள்ளப்படுகிறது. இதனை ஆங்கிலத்தில் Parody என்கின்றனர்.

'பக்த குசேலா - கலியுக மாடல்' எனும் நாடகத்தை குசேலர் கதைக்கு ஒரு பகடி போல எழுதியுள்ளார் ஆசிரியர். குழந்தைகள் அதிகம் உள்ள ஒரு குடும்பத்தில் வறுமை மிகுந்த சூழ்நிலையில் சாப்பாட்டு நேரம் எவ்வளவு போட்டி நிறைந்ததாகவும் பரிதாபத்துக்கு உரியதாகவும் இருக்கும் என்பதைக் காட்டுகிறது.

**'சார்! நிச்சயமா நாளைக்கு'**

புதுமைப்பித்தனின் 'நிச்சயமா நாளைக்கு' நாடகம் மத்தியதரக் குடும்பத்தின் அன்றாட சிக்கல்களைப் பற்றி பேசுவது.

கு.ப.ரா. மரணம் அடைந்தபொழுது வறுமை வாழ்வில் துயரப்பட்டு, உயிரோடு இருந்த காலத்தில் உரிய கவனிப்பும் கவுரவமும் கிடைத்திராத இலக்கியக் கலைஞனுக்காக 'ஓகோ உலகத்தீர், ஓடாதீர்'! என்று அங்கதச் சுவையில் கவிதை இயற்றியவர் புதுமைப்பித்தன். இவர் தம்மை ஒத்தவர் வாழ்வில் நடந்த ஒரு சோகத்தை கவிதை வடிவில் வெளிப்படுத்திய தைரியமான படைப்பாளி. இதன் சாரம்சம் நாடகத்திலும் வெளிப்பவதை காணலாம்.

மத்தியதரக் குடும்பத்தைச் சேர்ந்தவர். இல்லாமையைச் சமாளிக்க ஒவ்வொரு நாளும் கடன்கள்

வாங்கி, அவற்றைத் திருப்பித்தர இயலாத நிலையில் சாக்குப் போக்குகள் கூறிச் சமாளித்து, ஒவ்வொரு நாளும் சாமர்த்தியமாக சமாளித்து காலம் தள்ளுவதைச் சித்திரிப்பது ‘நிச்சயமா நாளைக்கு’ எனும் நாடகம்.

**வாக்கும் வக்கும்**

பொருளாதார வசதியுள்ள அறிவிலி ஒருவனையும், ஞானத்தை மிகுதியாகப் பெற்ற அறிவாளி ஒருவனையும் கதைமாந்தராகக் கொண்டு, செல்வம் அதிக வலிமை உடையதா? அறிவு அதிக வலிமை உடையதா? என ஆய்வு நடத்தும் இரண்டுக்குமிடையே நிகழும் போட்டியை அழகாக சித்திரிக்கும் நாடகம் 'வாக்கும் வக்கும்'.

**நாடக அமைப்புக் கூறுகள்**

நாடக அமைப்பு சிறிதும் குறைவுறாத வகையில் நாடகங்களைப் படைத்துள்ளார் புதுமைப்பித்தன்.

நாடகத்தில் ஒவ்வொரு பகுதியையும் வேறுபடுத்திக் காட்டுவதோடு கதை தொடர்ச்சியாக அமைவதற்குக் காரணமாக இருப்பதும் அங்கம் அல்லது காட்சி எனும் முக்கியமான நாடகக்கூறு ஆகும். புதுமைப்பித்தன் அவற்றிற்கு மாறாக 'சுருள்', 'வெட்டு' என்னும் தலைப்புகளில் காட்சிகளைக் கதைக்கு ஏற்ப கையாள்வது சிறந்த உத்தியாகக் கொள்ளலாம்.

பக்த குசேலா – 32 பக்கங்கள்

வாக்கும் வக்கும் – 74 பக்கங்கள்

'சார்! நிச்சயமா நாளைக்கு' – 11 பக்கங்கள் என ஒவ்வொரு கதைக்களத்திற்கேற்ப அதிகரித்தும் குறைந்தும் அமைத்துள்ளார்.

காட்சியமைப்புக் குறிப்புகள் நாடகத்தில் இடம்பெறுதல் அவசியமான ஒன்று. ஏனெனில் அக்குறிப்புகள் நிறைப் பொருள்களைத் தருவனவாக அமையும். உரையாடலில் சொல்ல முடியாததையும் விரிவாகக் கூறும். புதுமைப்பித்தனும் கதை, கதை மாந்தர், நிகழ் களம் இவற்றை நாடகத்தின் முதலே அறிமுகம் செய்துவிடுகிறார். அவ்வறிமுகத்தில் காட்சியும் கதைச்சூழலும் கதைக்கேற்ப நீட்டி அமைத்துள்ளார். உதாராணமாக வாக்கும் வக்கும் நாடகத்தில் ‘ஒரு தனவைசியர் வீடு', 'பூவுலகத்தில்', 'ஒரு நர்த்தன மண்டபம்', 'பிரம்ம லோகத்தில்', 'கவிஞன் வீடு' எனக் கதை நிகழ்வுகளைச் சுருக்கமாகப் பதிவிடுவதால் படிப்பவர்களுக்கு எளிமையாக புரியும் வண்ணம் அமைத்தது சிறந்த உத்தியாகக் கொள்ளலாம். இது நாடகத்தின் ஒரு முன்னோட்டமாக அமைய ஏதுவாகிறது.

**நாடகத்தின் பிற உத்திகள்**

நாவல், சிறுகதை படைப்பிலக்கியங்கள் போல நாடகத்திற்கும் கரு, பாத்திர உருவாக்கம், தலைப்பு, கால, கட்டமைப்பு, காட்சி அமைப்பு ஆகியன முக்கியமான பங்கு வகிக்கின்றன. புதுமைப்பித்தன் பயன்படுத்திய உத்திகளை இவண் காணலாம்.

**தலைப்பு :** நாடகத் தலைப்பு சரியாக அமைப்பது இன்றியமையாதது. கதை மாந்தர் பெயரோ, குறியீட்டுத் தலைப்போ, முரண் தலைப்போ, குறிப்பான உரையாடலோ, நகைச்சுவைத் தலைப்போ அனைவரையும் கவரும்படி அமைவது சிறப்பான ஒன்று. இதனை புதுமைப்பித்தன் திறம்படக் கையாள்கிறார். தொன்மக் குறியீட்டுத் தலைப்பாக வெளிப்படுவது 'பக்த குசேலா'; கதையில்

வெளிப்படும் முரண் தலைப்பாக வெளிப்படுவது ‘வாக்கும் வக்கும்’; கதைக் கருவிற்கேற்ற குறிப்பிடத்தகுந்த உரையாடல் அமைப்பாக அமைவது 'சார்! நிச்சயமா நாளைக்கு’ என்பன.

**எள்ளல் சுவை :** கதாப்பாத்திரங்களை எள்ளல் தன்மை வெளிப்படும் வண்ணம் அறிமுகம் செய்கிறார்.

திருவிசாரம்பிள்ளை – ‘சென்னையில் காலம் தள்ளும் ஒரு ஜந்து ’ என்று குறிப்படுகிறார். அதாவது சென்னையில் முப்பது ரூபாயில் குடித்தனம் நடத்துவது செப்பிடுவித்தை. வித்தையை யதார்த்தமாக தினமும் கையாளும் செப்பிடுவித்தைக்காரரான பிள்ளையை ’ஜந்து’ என்கிறார்.

புதுமைப்பித்தனின் எழுத்தில் கலந்துவிட்ட ஓர் அம்சமாக விளங்குவது சமூக எள்ளல். பக்த குசேலா நாடகத்தில் பாத்திரத்தை அறிமுகம் செய்யும்போது அச்சுவை திறம்பட வெளிப்படுவதை நம்மால் காணமுடியும்.

குசேலர் : மெலிந்தேகி. இடுப்பைச் சுற்றிலும் முதுகு வரையிலும் சொறி. இவருடைய அன்புக்குக் கிருஷ்ணபக்தியும் சிரங்கு உபாதையும் போட்டியிடுகின்றன.

குசேலரின் நான்கு வயதுப் பெண்ணுக்கு ஆசிரியர் சூட்டியிருக்கும் பெயர் ‘ஒட்டுப் பொறுக்கி’. எப்பொழுதும் வீட்டில் சிந்தியதை ஒட்டிப் பொறுக்கி தின்னும் குழந்தைக்கு வைத்த பெயர்.

இருமல் யந்திரம் : குசேலர் வசிக்கும் வீடில் முன்கட்டில் குடியிருக்கும் சர்க்கார் உத்தியோகஸ்தரின் தாயார். தொழில் காசநோயால் இருமுதல். கிருஷ்ணபக்தி.

**நாடகக் கரு**

புதுமைப்பித்தன் படைத்த நாடகங்கள் குறைவாக இருப்பினும் வெளிப்படுத்தும் கருக்களோ மிக சக்தி வாய்ந்தவையாக அமைகின்றன. வறுமை மிகுந்த குடும்பத்தில் தினமும் வயிற்றை நிரப்பும் அவலத்தையும், இல்லாமையைத் தினமும் சமாளித்துக் கடனோடும் நோயோடும் குடித்தனம் நடத்தும் பாங்கையும், செல்வம் பெற்ற அறிவிலி – ஞானம் பெற்ற அறிவாளி இவர்களிடையே வெளிப்படும் போட்டி மனப்பாமையையும் திறம்பட பாடுபொருளாகக் கையாண்டுள்ளார் புதுமைப்பித்தன்.

**நிறைவாக …..**

- இருபதாம் நூற்றாண்டின் சிறுகதைக்கும், கவிதைக்கும் புத்துயிர் கொடுத்த புதுமைப்பித்தன் நாடகத்துறையிலும் படைப்புகள் தந்தது போற்றுதலுக்குரியது.
- ஒவ்வொரு களத்திலும் ஆசிரியர், உரையாடல் துவங்குவதற்கு முன்னும், முடிந்ததன் பின்னும் இடையிலும் காட்சியமைப்புக் குறிப்புகளைத் தருவது சிறந்த உத்தியாகக் கூறலாம். இதனால் நிகழ்களத்தின் காட்சியமைப்பு படிக்கும் வாசகர் மனத்தில் நீங்கா இடம்பெறுகிறது.
- யதார்த்தமான பேச்சு நடையும், எள்ளல் தனமையும் என எளிமையான நாடக வடிவில் அமைத்துள்ள பாங்கு போற்றத்தக்கது.
- இந்நாடகங்கள் சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களும், சிக்கல்களும் அலசி ஆராய்ந்துள்ள விதம் சமுதாயத்திலுள்ள ஒவ்வொரு மனிதனையும் சிந்திக்க வைக்கும் என்பது உறுதி.

**துணைநூற்பட்டியல்:**

1. புதுமைப்பித்தனின் நாடகங்கள், தொகுப்பாசிரியர் – முனைவர் அ.சிவக்கண்ணன், 2002 - முதல் பதிப்பு, பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை.

2. புதுமைப்பித்தன் கதைகள், தொகுப்பாசிரியர் - வேதசகாயகுமார் எம்., 2002 - முதல் பதிப்பு, புதுமைப்பித்தன் பதிப்பகம்.
3. இந்திய இலக்கியச் சிற்பிகள் புதுமைப்பித்தன், வல்லிக்கண்ணன், 1995 - இரண்டாம் பதிப்பு, சாகித்திய அகாதெமி வெளியீடு.